Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C.)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

**C.C. No: 173 / 2024**

DATE : 22.05.2026

Depositions of witness for Prosecution

PW: 10

| | | | |
|---|---|---|---|
| Name | உதயசூரியன் | Caste | |
| Father/Husband's Name | பெரிய சேது ராமன் | Calling | சார்பு ஆய்வாளர் |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22 th day of May 2026

**(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகளுக்கு எதிராக பிடியாணை நிலுவையில் உள்ளது)**

**முதல் விசாரணை : –**

நான் தற்பொழுது நட்டம்பட்டி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் ராசு அவர்கள் இறந்துவிட்ட காரணத்தினால் அவர் தாக்கல் செய்து வைத்திருந்த ஆவணங்களின் அடிப்படையில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன். சார்பு ஆய்வாளர் ராசு கடந்த 07.11.2022 அன்று நிலைய பொறுப்பில் இருந்த பொழுது ஐ அம் கரிசல்குளத்தைச் சேர்ந்த செந்தில்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று அதன் தன்மைக்கு ஏற்ப நி.கு. எண் 145/2022 பிரிவு 379 இதச–ஆக முதல் தகவல்

அறிக்கை பதிவு செய்துள்ளார். **முதல் தகவல் அறிக்கை ஆக அ.சா.ஆ.9 குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் வழக்கினை அவருடைய விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் 14.00 மணிக்கு சாட்சிகள் ராமசாமி மற்றும் கருப்பையா ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் செந்தில்குமார், பாண்டியம்மாள், பாலசுப்பிரமணியன், ராமராஜ், கணேசன், ராமசாமி, ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதே தேதியில் 14.15 மணிக்கு சாட்சிகள் ராமசாமி மற்றும் கருப்பையா ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து சிதறி கடந்த சிறு கண்ணாடி துண்டுகளை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அத்தாச்சியில் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91 இல் உள்ள வழக்குச் சொத்து சா .பெ.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகளை பார்வையிட்டு கடந்த 09.11.2022 அன்று 13.00 மணிக்கு சிந்தாமணி டோல்கேட் அருகே நின்று கொண்டிருந்த பொழுது சந்தேகமான முறையில் வந்த இந்த வழக்கின் எதிரிகளான பால் டேனி என்ற டேனி மற்றும் சங்கர் ஆகியோர்களை காட்சிகள் திருப்பதி மற்றும் மாரிச்சாமி ஆகியவர்கள் முன்னிலையில் விசாரணை செய்த பொழுது எதிரி பால் டேனி என்ற டேனி எவ்வித அச்சுறுத்தலும் ஆசை வார்த்தைகளும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதே தேதியில் மற்றொரு எதிரியான சங்கர் என்பவர் 13.45 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எவ்வித அச்சுறுத்தலும் ஆசை வார்த்தைகளும் இன்றி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். பின்னர் 14.30 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி சங்கர் என்பவரிடமிருந்து TN

63 BL 6336 என்ற பதிவெண் கொண்ட Yamaha Fascino இருசக்கர வாகனத்தினை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். அத்தாட்சி **அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்னர் எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினமே 21.30 மணிக்கு மோகன்பாபு என்பவரை சேப்பாக்கத்திலுள்ள ரயில்வே பாலத்திற்கு அருகில் வைத்து காட்சிகள் திருப்பதி மற்றும் மாரிச்சாமி ஆகியோர்கள் முன்னிலையில் விசாரணை செய்த பொழுது எதிரி மோகன் பாபு எவ்வித அச்சுறுத்தலும் ஆசை வார்த்தையும் இன்றி தாமாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார். பின்னர் அதே சாட்சிகள் முன்னிலையில் 22.15 மணிக்கு சென்னை சேப்பாக்கம் ரயில் நிலையம் அடியில் உள்ள கார் பார்க்கிங்கில் வைத்து TN 59 AN 7308 என்ற பதிவெண் கொண்ட Tata Sumo Gold நான்கு சக்கர வாகனத்தினை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார்.

பின்னர் எதிரிகள் மற்றும் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து அத்தாட்சியில் கைப்பற்றிய சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91 இல் உள்ள வழக்குச் சொத்து சா .பெ.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91 அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. படிவம் 91 இல் உள்ள வழக்குச் சொத்து சா.பெ.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகளை விசாரணை செய்து மறுவாக்குமூலமும் வாக்கு மூலமும் பதிவு செய்துள்ளார். உரிய பதிவுகளுக்கு பின்னர் கடந்த 10.11.2022 அன்று எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். அன்றைய தினமே வழக்கின் சட்ட பிரிவுகளை 379 இதசவிலிருந்து 379, 411 இதச–ஆக சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் தன்னுடைய

விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜரில்லை. அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு